**டிசம்பர் – 07**

# TNPSC துளிகள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது இரு மாதத்திற்கு ஒரு முறை வெளியிடப்படும் தனது ஐந்தாவது நிதிக் கொள்கையில் ரெப்போ வட்டி வீதத்தை 5.15% ஆகவும் மாற்று ரெப்போ வட்டி வீதத்தை 4.90% ஆகவும் வங்கி வீதத்தை 5.40% ஆகவும் தொடர்ந்து மாற்றாமல் அதே அளவில் வைத்திருக்கின்றது.
    - இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநரான சக்தி காந்த தாஸ் தலைமையிலான ஆறு உறுப்பினர்களைக் கொண்ட நிதிக் கொள்கைக் குழுவானது (Monetary Policy Committee - MPC) ஒருமனதாக இந்த நிதிக் கொள்கைக்கு வாக்களித்துள்ளது.
- இந்திய நடிகையான பிரியங்கா சோப்ராவுக்கு யுனிசெப் அமைப்பினால் டேனி கே மனிதாபிமான விருது வழங்கப்பட்டுள்ளது. இவர் ஒரு நல்லெண்ணத் தூதராக கடந்த 15 ஆண்டுகளாக யுனிசெஃப் அமைப்புடன் இணைந்து பணியாற்றுகின்றார்.
- சென்னை, ஜெய்ப்பூர், கட்டாக், கொச்சி, இந்தூர் மற்றும் அமராவதி ஆகிய நகரங்களில் தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் ஐந்து அமர்வுகளை அமைக்க மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- டென்னிஸ் வீரரான ரோஜர் பெடரர் சுவிட்சர்லாந்தில் தனது சிறப்புத்துவத்திற்காக உயிருடன் இருக்கும் காலத்திலேயே தனது உருவம் பொறித்த நாணயத்தைக் கொண்ட முதலாவது நபராக உருவெடுத்துள்ளார். சுவிட்சர்லாந்தின் பெடரல் நாணய அச்சடிப்பு அமைப்பான சுவிஸ்மின்ட் ஆனது பெடரரின் படத்தைக் கொண்ட 20 பிராங்க் வெள்ளி நாணயத்தை உருவாக்கியுள்ளது.
    - சுவிஸ்மின்ட் அமைப்பானது உயிருடன் இருக்கும் ஒரு நபரை கௌரவிப்பதற்காக அவருடைய நினைவாக ஒரு நாணயத்தை உருவாக்கியது அதன் வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

# தேசியச் செய்திகள்

## பெண்கள் உதவி மையங்கள் @ காவல் நிலையங்கள்

- நாடு முழுவதும் உள்ள காவல் நிலையங்களில் பெண்கள் உதவி மையங்களை அமைப்பதற்கு மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகமானது இந்த நோக்கத்திற்காக நிர்பயா நிதியிலிருந்து ரூ 100 கோடி மதிப்பிலான நிதியை ஒதுக்கியுள்ளது.
- இந்த உதவி மையங்களில் மகளிர் காவல்துறை அதிகாரிகள் பணியமர்த்தப் படுவார்கள்.
- வழக்குரைஞர்கள், உளவியலாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் போன்ற வல்லுநர்களும் இந்த உதவி மையங்களில் ஒரு பகுதியாக இருப்பார்கள். மேலும் இவர்கள் உதவி தேவைப் படுபவர்களுக்கு சட்ட உதவி, ஆலோசனை, தங்குமிடம், மறுவாழ்வு மற்றும் பயிற்சி போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவார்கள்.

## இந்திரா 2019 - பயிற்சி

- இந்திரா 2019 என்ற பயிற்சியானது இந்தியாவில் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் தேதி முதல் டிசம்பர் 19 ஆம் தேதி வரை ஒரே நேரத்தில் பாபினா (ஜான்சிக்கு அருகில்), புனே

மற்றும் கோவாவில் நடத்தப்பட இருக்கின்றது.

- இது இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையே நடத்தப்படும் ஒரு கூட்டு, முப்படைப் பயிற்சியாகும்.
- இந்திரா பயிற்சித் தொடரானது 2003 ஆம் ஆண்டில் தொடங்கியது. முதலாவது கூட்டு, முப்படைப் பயிற்சியானது 2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

## தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது – 2019

- இந்திய செவிலியர் தினத்தை முன்னிட்டு இந்தியக் குடியரசுத் தலைவரான ராம்நாத் கோவிந்த் செவிலியர் பணியாளர்களுக்கு தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளை வழங்கினார்.
- இந்த விருதுகளானது செவிலியர்களால் வழங்கப்படும் சிறப்பான சேவைகளை அங்கீகரிப்பதற்காக இந்திய அரசாங்கத்தால் 1973 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன.
- நிபா நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிக்குச் சிகிச்சையளிக்கும் போது கொடிய நிபா வைரஸால் கேரளாவைச் சேர்ந்த லினி பிஎன் என்ற செவிலியர் இறந்தார். அவருடைய இறப்பிற்குப் பின்பு அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டில் இந்த விருதானது மேலும் 35 செவிலியர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

## பிரஞ்சு - மீட்டோர் ஏவுகணைகள் விரைவாக வழங்குதல்

- பத்து மீட்டோர் (Meteor) ஏவுகணைகளை விரைவாக வழங்குமாறு இந்தியா பிரான்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
- பாகிஸ்தானின் வசம் உள்ள அமெரிக்காவைச் சேர்ந்த அம்ராம் ஏவுகணைகளிலிருந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இந்த ஏவுகணைகள் பயன்படுத்தப்பட இருக்கின்றன.




- மீட்டோர் என்பது கண்ணுக்கு எட்டிய தூரத்திற்கு அப்பால், விண்ணிலிருந்து விண்ணில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் அதே வகுப்பைச் சேர்ந்த ஒரு மிகச் சிறந்த ஏவுகணையாகும்.

- இது 100 கி.மீ தூரத்தில் உள்ள எதிரி விமானங்களைத் தடுத்து அழிக்கும் திறன் கொண்டது.
- இது தனது வரம்பிலிருந்து 60 கி.மீ.க்குள் இருக்கும் ஏவுகணைகளைத் தப்பித்துச் செல்ல விடாமல், அதனைத் தாக்கி அழிக்கின்றது. இந்த ஏவுகணையானது தற்போது பாகிஸ்தானில் சேவையில் இருக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த AMRAAMஐ விட அதிகத் திறன் கொண்டது.
- இலக்கு தப்பித்துச் செல்லாமல் இருக்கும் பகுதி என்பது இலக்கிற்கு எச்சரிக்கை விடுக்கப் பட்டிருந்தாலும் கூட, அந்த ஒரு இலக்கிற்கு எதிராக "அதனைத் தாக்கி அழிக்க அதிக சாத்தியம்" கொண்ட ஒரு பகுதியாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## பசிபிக் விமானப் படைத் தளபதிகள் கருத்தரங்கு 2019

- 2019 ஆம் ஆண்டின் பசிபிக் விமானப் படைத் தளபதிகள் கருத்தரங்கில் இந்திய விமானப் படைத் தலைமைத் தளபதியான ராகேஷ் குமார் சிங் பதோரியா இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்.
- இந்தச் சந்திப்பானது அமெரிக்காவின் ஹவாயில் உள்ள பேர்ல் துறைமுகக் கூட்டுத் தளத்தில் அமெரிக்காவால் நடத்தப்பட்டது.
- இந்த ஆண்டின் கருத்தரங்கிற்கான கருப்பொருள் 'பிராந்தியப் பாதுகாப்பிற்கான ஒரு கூட்டு அணுகுமுறை' என்பதாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## 2020 - 21 ஆம் நிதியாண்டிற்கான 15வது நிதி ஆணையத்தின் அறிக்கை

- என் கே சிங் தலைமையிலான நிதி ஆணையமானது 2020 - 21 ஆம் நிதியாண்டிற்கான தனது அறிக்கையை இந்தியக் குடியரசுத் தலைவரான ராம்நாத் கோவிந்திடம் சமர்ப்பித்துள்ளது.
- 15வது நிதி ஆணையமானது 2017 ஆம் ஆண்டு நவம்பர் 27 அன்று இந்திய அரசியலமைப்பின் 280வது சரத்தின் கீழ் இந்தியக் குடியரசுத் தலைவரால் அமைக்கப் பட்டது.
- இதன் பணி 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையுள்ள ஐந்து வருடங்களுக்கான நிதியியல் தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதாகும்.
- இந்த நிதி ஆணையத்தின் பதவிக் காலம் முதலில் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நிறைவடைய இருந்தது. ஆனால் அதற்குப் பின்னர் ஒரு மாத காலத்திற்கு, அதாவது நவம்பர் 30 ஆம் தேதி வரை இந்த ஆணையத்தின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகளாவிய காலநிலை அபாயக் குறியீடு - இந்தியா 5வது இடம்

- சுற்றுச்சூழல் சார்ந்த கொள்கை வகுக்கும் குழுவான "ஜெர்மன்வாட்ச்" என்ற அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் படி, காலநிலை மாற்றத்தால்

மிகவும் பாதிப்புக்கு உள்ளாகும் நாடுகளின் பட்டியலில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது.

- 2020 ஆம் ஆண்டின் காலநிலை அபாயக் குறியீட்டில், இந்தியாவின் தரவரிசையானது 2017 ஆம் ஆண்டில் 14வது இடத்திலிருந்து 2018 ஆம் ஆண்டில் 5வது இடத்திற்குச் சென்றுள்ளது.
- காலநிலை மாற்றத்தால் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகளையும் இந்தியா பதிவு செய்துள்ளது.
- மேலும் 2018 ஆம் ஆண்டில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால் இரண்டாவது அதிகபட்ச நிதி இழப்புகளையும் இந்தியா சந்தித்துள்ளது.
- ஜப்பான், பிலிப்பைன்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகியவை 2018 ஆம் ஆண்டில் காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட மூன்று நாடுகளாகும்.
- ஜெர்மனியில் உள்ள "ஜெர்மன்வாட்ச்" என்பது நீடித்த உலகளாவிய வளர்ச்சிக்குப் பணியாற்றும் ஒரு சுயாதீனமான வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பாகும்.

| Ranking 2018 (2017) | Country | CRI score | Death toll | Deaths per 100 000 inhabitants | Absolute losses (in million US$ PPP) | Losses per unit GDP in % | Human Development Index 2018 Ranking[12] |
|---|---|---|---|---|---|---|---|
| 1 (36) | Japan | 5.50 | 1 282 | 1.01 | 35 839.34 | 0.64 | 19 |
| 2 (20) | Philippines | 11.17 | 455 | 0.43 | 4 547.27 | 0.48 | 113 |
| 3 (40) | Germany | 13.83 | 1 246 | 1.50 | 5 038.62 | 0.12 | 5 |
| 4 (7) | Madagascar | 15.83 | 72 | 0.27 | 568.10 | 1.32 | 161 |
| 5 (14) | India | 18.17 | 2 081 | 0.16 | 37 807.82 | 0.36 | 130 |
| 6 (2) | Sri Lanka | 19.00 | 38 | 0.18 | 3 626.72 | 1.24 | 76 |
| 7 (45) | Kenya | 19.67 | 113 | 0.24 | 708.39 | 0.40 | 142 |
| 8 (87) | Rwanda | 21.17 | 88 | 0.73 | 93.21 | 0.34 | 158 |
| 9 (42) | Canada | 21.83 | 103 | 0.28 | 2 282.17 | 0.12 | 12 |
| 10 (96) | Fiji | 22.50 | 8 | 0.90 | 118.61 | 1.14 | 92 |

# மாநிலச் செய்திகள்

## ஸ்டார்ட் அப் இந்திய உலகளாவிய துணிகர முதலீடு உச்சி மாநாடு – கோவா

- ஸ்டார்ட் அப் இந்திய உலகளாவிய துணிகர முதலீடு உச்சி மாநாட்டின் 2வது பதிப்பானது கோவாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த உச்சி மாநாடானது மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தொழில் துறை & உள்நாட்டு வர்த்தக ஊக்கமளிப்புத் துறை மற்றும் கோவா அரசாங்கம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த மாநாட்டின் கருப்பொருள், 'இந்தியாவின் வாய்ப்புகள் – எதிர் காலத்தில் ஒன்றிணைவதற்காக முதலீடு செய்தல்' என்பதாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர், ராஜீவ் மெஹ்ரிஷி - உலக சுகாதார அமைப்பின் அயலகக் கணக்குத் தணிக்கையாளர்

- 2020 முதல் 2023 வரையிலான நான்கு ஆண்டுகளுக்கு உலக சுகாதார அமைப்பின் (WHO - World Health Organization) அயலகக் கணக்குத் தணிக்கையாளராக இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர், ராஜீவ் மெஹ்ரிஷி (Comptroller and Auditor General of India - CAG) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- கடந்த மாதம் ஜெனீவாவில் நடத்தப்பட்ட 72வது உலக சுகாதார சபையில் இவர் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்த ஆண்டில் CAGக்கான இரண்டாவது மிகப்பெரிய சர்வதேச கணக்குத் தணிக்கைப் பணி இதுவாகும்.
- மேலும் இவர் ரோம் நகரில் உள்ள உணவு மற்றும் வேளாண் அமைப்பின் அயலகக் கணக்குத் தணிக்கையாளர் பதவிக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

# விளையாட்டுச் செய்திகள்

## சென்னையின் செஸ் வீரர் - ஆர். பிரக்ஞானந்தா

- லண்டன் செஸ் சார்ந்த ஒரு நிகழ்ச்சியில், சென்னையின் ஆர் பிரக்ஞானந்தா 14 வயது, மூன்று மாதங்கள் மற்றும் 26 நாட்களில் 2600 என்ற எலோ மதிப்பீட்டைத் கடந்துள்ளார்.
- 2600 என்ற மதிப்பீட்டைக் கடந்த மிகவும் இளைய இந்தியர் மற்றும் உலகின் இரண்டாவது இளையோர் இவராவார்.
- இந்தியாவின் இரண்டாவது இளைய கிராண்ட் மாஸ்டரான பிரக்ஞானந்தா, 2600 என்ற மதிப்பீட்டைக் கடந்த இளைய இந்தியர் என்ற நிஹால் சாரின் சாதனையை முறியடித்தார்.

# முக்கிய தினங்கள்

## இந்தியக் கடற்படை தினம் - டிசம்பர் 4

- இந்தியக் கடற்படை தினமான டிசம்பர் 4 ஆனது டிரடண்ட் நடவடிக்கையின் நினைவு தினமாகும். இத்தினமானது கடற்படையின் துணிச்சலைக் கொண்டாடுகின்றது.
- இந்த நடவடிக்கையானது 1971 ஆம் ஆண்டில் நடந்த இந்திய - பாகிஸ்தான் போரின் போது கராச்சி துறைமுகத்தில் இந்தியக் கடற்படையால் நடத்தப்பட்ட ஒரு எதிர்த் தாக்குதலாகும்.
- இந்த நடவடிக்கையின் போது இந்தியா முதன்முறையாக கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்தியது. பாகிஸ்தானைச் சேர்ந்த இலக்கை தாக்கி அழிக்கும் கப்பலான பி.என்.எஸ் கைபரை இந்தியா அழித்தது.

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004
TNPSC THERVU PETTAGAM
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative




## உலக மண் தினம் - டிசம்பர் 5

- ❖ உலக மண் தினமானது (World Soil Day - WSD) வளமான மண்ணின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. இது மண் வளங்களின் நிலையான மேலாண்மையை ஆதரிக்கின்றது.




- ❖ WSD ஆனது சர்வதேச மண் அறிவியல் ஒன்றியத்தினால் (IUSS) 2002 ஆம் ஆண்டில் பரிந்துரைக்கப் பட்டது.
- ❖ 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆன்று ஐ.நா பொதுச் சபையால் முதல்முறையாக அதிகாரப்பூர்வ WSD ஆனது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ❖ 2019 ஆம் ஆண்டின் உலக மண் தினத்தின் கருப்பொருள், 'மண் அரிப்பைத் தடுத்து நிறுத்துங்கள், நமது எதிர்காலத்தைக் காப்பாற்றுங்கள்' என்பதாகும்.
- ❖ உணவு மற்றும் வேளாண்மை அமைப்பானது (FAO - Food and Agriculture Organisation) தாய்லாந்து அரசின் தலைமையின் கீழ் WSDஐ ஒரு உலகளாவிய விழிப்புணர்வு தினமாக முறையாக நிறுவுவதற்கு ஆதரவளித்தது.
- ❖ WSD தினக் கொண்டாட்டத்தின் போது FAO இரண்டு விருதுகளை வழங்குகிறது.

அவையாவன,

- கிங் பூமிபோல் உலக மண் தின விருது,
- கிளிங்கா உலக மண் பரிசு.

## பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுக்கான சர்வதேச தன்னார்வ தினம் - டிசம்பர் 5

- பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுக்கான சர்வதேச தன்னார்வலர்கள் தினம் 1985 ஆம் ஆண்டில் ஐ.நா பொதுச் சபையால் ஏற்படுத்தப்பட்டது.
- இது பல்வேறு அரசு சாரா நிறுவனங்கள், மக்கள் சமூகம் மற்றும் தனியார் அமைபுகளால் கொண்டாடப் படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருப்பொருள் "அனைத்தையும் உள்ளடக்கிய எதிர்காலத்திற்கான தன்னார்வலர்கள்" என்பதாகும். இது அனைத்தையும் உள்ளடக்கிய உட்பட நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு 10 மற்றும் சமத்துவத்தைப் பின்தொடர்தல் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★